முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சிவவாக்கியர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

31.03.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **அருட்குருவாக நின்றருளும் அரங்கா**
**அறம் கொண்டு உலக உயிர்களின்**
**இருள் போக்கி காக்கும் ஞானதேசிகா**
**ஏழாம் படை வீட்டின் ஞானியே உன் பெருமை கூறி**

2. கூறியே நித்ய பிரசன்ன ஆசி
குறையிலா **விளம்பி சேல் திங்கள்**
**தெரியவே மூவைந்தீர் திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 17ம் நாள் 31.03.2019, ஞாயிற்றுக்கிழமை)**
**தேசிகனுக்கு சிவவாக்கியர் யானும்**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் காட்டும்
ஞானவழியே சிறந்த வழி
ஞாலமதில் உலகோர் ஏற்று வர

4. வருகவே மக்களை வாட்டும்
வக்கிர கொடூர செயல்கள் மாறும்
முருகா என்று முழங்கி வருக
முழுமையான பாதுகாப்பு சூழல் உருவாகும்

5. ஆகுமே மங்கைகட்கு பாதுகாப்பு
ஆபத்து கண்டம் வராத நிலை
வகைபட உலகில் பெருகி
வடிவேலன் பாதுகாப்பு பெருகும்

6. பெருகவே அரங்கன் தருமம்
பெருமளவில் சுத்தநெறி வளரவே
முருகா எனும் தொண்டர் படை
முழுமைபட சரணடைவு கொண்டு

7. கொண்டு அரங்கன் தயவுபட
குடிலை நாடி தீட்சை பெற
தொண்டு வழி இணைந்து கலந்து
தேசிகனே குரு எனும் சரணடைவு கண்டுவிட

8. கண்டுவிட எங்கும் எதிலும்
கந்தவேலன் சக்தி இறங்கி
உண்டாக்கும் பெரும் பாதுகாப்பை
உயர்த்தும் உலகினில் முதன்மையாக

9. ஆகவே தமிழக மக்களே
ஆறுமுகப் பெருமானை ஏற்று
வகைபட நித்ய பூசையோடு
வழுவாது தருமத்தில் உதவி

10. உதவியே தருமபலம் பெருக்கி
உலகமெங்கும் அரங்கன் நாமம்
ஆதரவாய் ஒலிக்கச் செய்ய
ஆறுமுகன் வெளிப்பாடு உறுதி

11. உறுதி கொண்டு சடுதி வந்து
உலகே ஞான உலகமாகும்
ஆறுமுகா அரங்கா என வர
அனைவருமே ஞானிகள் ஆவர் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சிவவாக்கியர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

உலக மக்களை அறியாமையில் இருந்து மீட்டு ஞானஒளி காட்டி வழிநடத்தும் அருட்குருவே மக்களுக்கு உபதேசம் அருளும் அரங்கமகா குருவே, அறம் எனும் தர்மத்தின் சக்தி கொண்டு உலக உயிர்களின் அறியாமை எனும் இருள் போக்கி ஞானம் எனும் ஒளி காட்டி காக்கின்ற ஞானதேசிகா ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலின் மகா ஞானியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 17ம் நாள் 31.03.2019, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே சிவவாக்கியர் யானும் நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே உரைக்கின்றேன் என்கிறார் மகான் சிவவாக்கியர்.

உயர் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்ற எளிமையானதும் ஜென்மத்தைக் கடைத்தேற்றவல்லதுமான ஞானவழியே உலகினில் மிகச்சிறந்த ஞானவழியாகும். உலகினில் மக்களெல்லாம் அரங்கனின் ஞானநெறியினை ஏற்றுக் கொண்டு கடைப்பிடித்து வர, மக்களை வாட்டுகின்ற வக்கிரமான கொடூர எண்ணங்கள் செயல்கள் எல்லாம் மாறிடும். முருகா, முருகா, முருகா என்றே நாமஜெபங்களை பயபக்தியுடன் ஜெபித்துவர உலகம் முழுதும் முழுமையான அருள் பாதுகாப்பு சூழல் உருவாகிடும்.

உலகினில் அரங்கரின் நெறி பரவி, மக்கள் அரங்கரின் தூயநெறியினை கடைப்பிடித்துவர, உலகினில் பெண்களுக்கு பாதுகாப்பு அதிகமாகும். உலகினில் பெண்களுக்கு பாதுகாப்பு அதிகமாகி ஆபத்துகள் கண்டங்கள் வராமல் உலகினில் பாதுகாப்பான சூழல் உருவாகி முருகப்பெருமானின் அருள் பாதுகாப்பும் பெருகிடும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தருமம், உலகமெலாம் பரவி பெருகி அரங்கனின் தூயநெறி உலகினில் வளரவளர, முருகப்பெருமானை வணங்கும் தொண்டர்படை உலகினில் உருவாகும். முருகப்பெருமானை வணங்கும் அவரெல்லாம் அரங்கன் திருவடிகளிலே முழுமனதாய் சரணடைவு கொண்டு ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தயவு பெற்று, ஓங்காரக்குடிலை நாடி வந்து தீட்சை உபதேசம் அடைந்திட அவரெல்லாம் தொண்டுகள் மூலமாக ஒன்றிணைந்து அரங்கனின் தருமச் செயல்களை தமது செயலாக எண்ணி செய்து அரங்கரின் பொதுநலச் சேவையில் கலந்து அரங்கமகாதேசிகனே குரு என்கிற பேருண்மை புலப்பட்டு அரங்கரின் திருவடிகளே கதியென சரணடைவு கொண்டுவிட, உலகினில் எங்கும் எதிலும் முருகப்பெருமானின் சக்தி இறங்கி உலகினில் அருள்பாதுகாப்பை உண்டாக்கிடும், உலகினை முதன்மையான நிலைக்கு உயர்த்திவிடும்.

ஆதலினால் தமிழக மக்களே முருகப்பெருமானை முழுமுதற் கடவுளாக ஏற்று முறையோடு தினம்தினம் மறவாமல் பூசைகளைச் செய்து தவறாமல் தருமங்களை செய்து, அவரவரின் தருமபலத்தை பெருக்கி உலகமெங்கும் குருநாதர் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருநாமங்களை ஒலித்திட செய்து, உலகினில் அரங்கன் புகழையும், ஆறுமுகனார் புகழையும் பரப்பி, உலகமெங்கும் அரங்கநாமத்தினை ஒலித்திட செய்திட முருகப்பெருமானின் வெளிப்பாடு உறுதிபட நடக்கும்.

அரங்கனின் தலைமையில் முருகப்பெருமான் தலைமையேற்க உலகம் சடுதி மாறி, உலகமே ஞானஉலகமாக மாறிடும். ஆறுமுகப்பெருமானே அரங்கமகாதேசிகனே என மனம் உருகி வரவர, அவரெல்லாம் ஞானிகளாக ஆகிடுவார்கள் எனக் கூறுகிறார் மகான் சிவவாக்கியர்.

–சுபம்–